பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 02 சனிக்கிழமை 19.10.2024 கதிர் 346

# தமிழ் தேசியப் போலிகளை முற்றாக துடைத்தெறிவோம்

## புதிய தமிழ் தேசிய அரசியல் உருவாக்கத்திற்கு யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் அழைப்பு

தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக்கும், அரசியற் பண்பாட்டிற்கும் முற்றிலும் எதிரான அரசியலை முன்னெடுத்த தமிழ்த் தேசியப் போலிகளை இந்த மண்ணிலிருந்து துடைத்தெறிந்து புதிய தமிழ்த் தேசிய அரசியற் பண்பாட்டை தோற்றுவிப்பதே உண்மையான மாற்றமாகும். மாறாக ஊழல் எதிர்ப்பு, கவர்ச்சி அரசியலினால் தென்னிலங்கைத் தரப்புக்களை தமிழ் அரசியலிற்கு மாற்றாக முன்னிறுத்துவது அரசியல் தற்கொலைக் குச்சமமாகுமம்.யாழ்ப்பாணப்பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள், தென்னிலங்கையிலிருந்து அது வருவதில்லை என்று தெரிவித்தனர்.

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த மாணவர் ஒன்றியத்தினர் இதனைத் தெரிவித்தனர். அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

சிங்கள- பௌத்த பேரினவாதம் முழுவீச்சில் செயற்படுவதற்கான வாய்ப்புக்களைப் பொருளாதார நெருக்கடி தற்காலிகமாக மட்டுப்படுத்தியுள்ள நிலையில் சிங்கள மக்கள் மாற்றமொன்றினை எதிர்பார்த்து வாக்களித்துள்ளனர். எனினும் சிங்கள மக்களின் வாக்களிப்பு முறைக்கு நேர்மாறாக வாக்களித்ததன் மூலம் எம்மிடையே நிலவுவது பொருளாதார நெருக்கடி மட்டுமல்ல என்பதை தமிழ் மக்கள் தெளிவாக எடுத்துரைத்துள்ளனர்.

15ஆண்டுகளாகதலைமைத்துவவெற்றிடம் நிலவும் வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தில் தெற்கில் ஏற்பட்டுள்ள ஊழலற்ற ஆட்சி, இளையோர்களின் அரசியற் பங்கேற்பு உள்ளிட்டவைகளின் தாக்கம் ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

ஒருபக்கம் இளைஞர்களை அரசியல் அதிகாரத்திற்குத் தெரிவு செய்யச் சொல்லி அண்மைக் காலமாகக் கடுமையாகப் பரப்புரை செய்யப்படுகின்றது. இளைஞர்கள் நாடாளுமன்றத்திற்கும் அரசியல் அதிகாரத்திற்கும் வருவது ☞ 2

## ஆளும்தரப்புக்கு ஒத்துழைப்போம்

### நாமல் உறுதிமொழி

ஆளும்தரப்பின் அனைத்து செயற்பாடுகளையும் விமர்சித்து அதனை நெருக்கடிக்குள்ளாக்கும் நோக்கம் எமக்கு கிடையாது. சிறந்த அரச நிர்வாகத்துக்காக ஆளும்தரப்புக்கு முழுமையானஒத்துழைப்புவழங்குவேன் என்று பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர்நாமல்ராஜபக்சதெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவின் கட்சிப் பணியகத்தில் நேற்று ☞ 2

## வெண்மையாக்கும் கிறீம்களால் பாதிப்பு

### சுகாதார அமைச்சு எச்சரிக்கை

பெரும்பாலான சருமத்தை வெண்மையாக்கும்க்ரீம்களில்அதிகபட்சவரம்பை மீறி கன உலோகங்கள் இருப்பதால், இத்தகையக்ரீம்களைபயன்படுத்துவதால், சருமத்தை பாதிக்கும் நோய்கள் ஏற்படும் என சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஆனந்த ஜெயலால் தெரிவித்துள்ளார். நரம்புகள்.

2003ஆம் ஆண்டின் 9 ஆம் ☞ 8

## விளக்கமறியல்

மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதிக்கு எதிராக கொழும்பில் சுவரொட்டி அச்சடித்து ஒட்டப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை ஒக்டோபர் 21 வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் ஹர்ஷன கெகுனாவெல நேற்று உத்தரவிட்டார்.

மாத்தளையை வசிப்பிடமாகக் கொண்ட இஷான் குணசேகர, அரவையை வசிப்பிடமாகக் கொண்ட கிரிஷான் நாலக, மடபடவை வசிப்பிடமாகக் கொண்ட மனோஜ் மதுஷங்க, களனிப் பல்கலைக்கழக பட்டதாரியான லக்மால் விக்கிரமசிங்க, கொழும்பு பல்கலைக்கழகத்தின் ☞ 2



## பௌத்த மதத்துக்கு எதிராக 550 குழுக்கள் செயற்பாடு

### ஞானசார தேரர் கவலை

பௌத்தத்துக்கு எதிராக 550 அடிப்படைவாதக் குழுக்கள் இந்நாட்டில் செயற்படுகின்றன. இதனைக்கூறபயப்பட வேண்டாம் என பொதுபல சேனா அமைப்பின் தலைவர் கலகொடஅத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

அலுஹுங்கல்ல வெலிகந்த புராண ஸ்ரீ சுதர்ஷனாராம ☞ 2

நாணய நிதியத்தின் ஒப்பந்தந்தை மறுசீரமைக்க

## நாடாளுமன்ற அதிகாரத்தை ஐக்கிய மக்கள் சக்திக்கு தருக

### சஜித் பிரேமதாச கோரிக்கை

தேசிய மக்கள் சக்தி தேர்தலுக்கு முன்ன வழங்கிய வாக்குறுதியைப் போன்று சர்வதேச நாணய நிதியத் துடனானஒப்பந்தத்தைமறுசீரமைத்து வரிகளைக் குறைக்கவில்லை. எனவே நாடாளுமன்றத்தின் அதிகாரத்தை எம்மிடம் தாருங்கள். அப்படித்த தந்தால் நாம் நாணய நிதியத்துடன் பேசுவோம் என்று ஐக்கியமக்கள்சக்தியின்தலைவரும், கொழும்பு மாவட்ட வேட்பாளருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் அவிசாவளை தேர்தல் தொகுதி கட்சி செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பொன்றுஐக்கியமக்கள் ☞ 8

## வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்ட அரச சொத்துக்களை மீட்கவேண்டும்

### ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

தேசிய மக்கள் சக்தி எதிர்க்கட்சியிலிருந்தபோது பேசிக்கொண்டிருந்ததைப் போன்று, இனியும் இருக்க முடியாது. அன்று தேர்தல் பரப்புரை மேடைகளில் பேசியவற்றை செயற்படுத்தவேண்டும். வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாகக்கூறப்படும் அரசசொத்துக்களை மீளக் ☞ 8

## வியாழேந்திரன் தரும் ஆதரவை ஜனநாயகக் கூட்டணி மறுக்காது

### வேட்பாளர் ஜனா தெரிவிப்பு

மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான வியாழேந்திரன் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு ஆதரவு தந்தால் அதை மறுக்கமாட்டோம். ஆனால, அவருக்கும் எங்களுக்கும் எந்தவிதமான உடன்படிக்கையும் இல்லையென்பதை உறுதியாக கூறுகின்றேன் என்று ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்டதலைமைவேட்பாளரும்முன்னாள்நாடாளுமன்ற உறுப்பினருமான கருணாகரம் தெரிவித்தார்.

2024 நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைகளை ஆரம்பிக்கும் வகையில் மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகளில் ஈடுபட்டார். ☞ 2

## அமைச்சர் விஜித ஹேரத்தின் கருத்துக்கள் பொய்யானவை

### முன்னாள் அமைச்சர் காஞ்சன குற்றச்சாட்டு

அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் விஜித ஹேரத் வெளியிட்ட பல கருத்துக்கள் பொய்யானவை என்று முன்னாள் அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

விஜித ஹேரத் எதிர்க்கட்சியில் இருந்தபோதும், ஆளும்தரப்பில் இருந்தபோதும் பொய்யான கருத்துக்களையே வெளியிட்டு ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

நல்லதுதான், ஆனால் நாட்டில் தற்போதுள்ள நடைமுறையில் இளைஞர்கள் அரசியல் அதிகாரத்திற்கு வருவதாலும் பக்கவிளைவுகள் அதிகம் உள்ளன.

அரசுத் தலைவராகவோ, அமைச்சர்களாகவோ, நாடாளுமன்ற உறுப்பினர்களாகவோ இருந்தால் அவர்களுக்கு ஒய்வூதியம் மற்றும் சலுகைகள் அரசால் வழங்கப்படுவதே இந்தப் பக்க விளைவுகளுக்குக் காரணம். இளைஞர்கள் அரசியல் அதிகாரத்திற்கு வரும்போது, நியாயப்படி அவர்கள் முதியவர்களாவதற்கு முன்பே இளைஞர்களுக்கு வழிவிட்டு அரசியலில் இருந்து ஒதுங்கவேண்டும் இல்லையே ஒதுக்கப்படுவார்கள். அப்படியான நிலையில் அவர்களுக்கு அரசால் வழங்கப்படும் சலுகைகளை மிக நீண்ட காலம் வழங்கவேண்டியிருக்கும்.

இப்போது 4 முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் முன்னாள் ஜனாதிபதி ஒருவரின் விதவை மனைவி ஆகியோருக்கான சிறப்புரிமை வசதிகளை வழங்குவதற்காக மட்டுமு 3 வருடங்களில் செலவிடப்பட்ட தொகை 26 கோடி ரூபாய் என்று கண்டறியப்பட்டுள்ளது.

சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, மகிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ச மற்றும் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் மனைவி திருமதி ஹேமா பிரேமதாச ஆகியோரின் பராமரிப்புக்காக மட்டுமே மூன்று வருடங்களில் (2022 - 2024) இந்தத் தொகை செலவிடப்பட்டுள்ளதாக மத்திய வங்கி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டு இந்தப் பராமரிப்புக்காக செலவிடப்பட்ட தொகை ஏழு கோடி ரூபாய் என அந்த அறிக்கை தெரிவிக்கிறது. 2023ஆ-ம் ஆண்டில் எட்டு கோடி ரூபாய்க்கும் அதிகமாகச் செலவிடப்பட்டுள்ளது இந்த ஆண்டு அது 11 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. இது தவிர, ரணில் விக்கிரமசிங்கவுடன் சேர்த்து இந்த ஆண்டிலிருந்து முன்னாள் ஜனாதிபதிகளின் எண்ணிக்கை 5 ஆக உயர்ந்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகள் மற்றும் அவர்களின் தேவைகள் தொடர்பில் எழுத்துமூல அறிக்கையை சமர்ப்பிக்குமாறு முன்னாள் ஜனாதிபதிகளின், அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகளை மீளாய்வு செய்வதற்காக ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவினால் நியமிக்கப்பட்ட மூவரடங்கிய குழு, அறிவித்திருந்தது.

அறிக்கையின்படி, பல முன்னாள் ஜனாதிபதிகள் ஏற்கனவே மேற்படி குழுவிடம் விவரங்களைச் சமர்ப்பித்துள்ளனர். அவற்றைக் குழு ஆராய்ந்து வருகின்றது.

முன்னாள் ஜனாதிபதிகளின் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகள் தொடர்பில் தற்போதுள்ள கட்டளைச் சட்டங்களை ஆராய்ந்து அது தொடர்பான பரிந்துரைகளை வழங்குவதற்காக ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவினால் இந்தக் குழு அண்மையில் நியமிக்கப்பட்டது.

ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி கே.டி.சித்ரசிறி தலைமையிலான மூவரடங்கிய குழுவில் ஓய்வுபெற்ற அமைச்சின் செயலாளர் டி. திஸாநாயக்க மற்றும் ஓய்வுபெற்ற மாவட்ட செயலாளர் ஜயந்த புலமுல்ல ஆகியோர் அடங்கியுள்ளனர்.

இந்தக் குழுவினால் ஆய்வுசெய்யப்பட்டதன் அடிப்படையில், முன்னாள் ஜனாதிபதிகளின் உரிமைகள், கொடுப்பனவுகள் மற்றும் சலுகைகள் தொடர்பான சட்டமூலத்தின்படி, அவர்களுக்கு ஓய்வூதியம், உத்தியோகபூர்வ இல்லம், மூன்று வாகனங்களுக்கான எரிபொருள் மற்றும் தனிப்பட்ட செயலாளருக்கான ஊதியம் என்பவற்றைப் பெற மட்டுமே உரிமையுள்ளது.

ஆனால் கடந்த காலங்களில் முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளின் கீழ் பல சலுகைகள் உள்ளடக்கப்பட்டு தண்ணீர் கட்டணம், மின்சார கட்டணம்கூட அரசின் செலவில் செலுத்தப்பட்டுள்ளன.

இதன்படி, ஓய்வுபெற்ற ஜனாதிபதிகளின் ஒவ்வொரு பாதுகாப்புப் பிரிவிற்கும் நியமிக்கப்பட்டுள்ள பணியாளர்கள் மற்றும் பாதுகாப்புப் பணியாளர்களின் எண்ணிக்கை மற்றும் பாதுகாப்புக்காக பொது பாதுகாப்பு அமைச்சகம் அல்லது வேறு ஏதேனும் அமைச்சகத்தால் ஒதுக்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் விவரங்களை இந்தக் குழு தற்போது திரட்டி ஆராய்ந்து வருகின்றது.

மேலும், பாதுகாப்பு பிரிவுகளுக்கு வாடகை அடிப்படையில் கட்டடங்கள் வாங்கப்பட்டிருந்தால், மாத வாடகை மற்றும் இதர வசதிகள் எப்படி வழங்கப்படுகின்றன என்பதும் ஆராயப்படும்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளின் உரிமைகள் மற்றும் சிறப்புரிமைகளை மீளாய்வு செய்வதற்காக அமைச்சர்கள் குழுவினால் நியமிக்கப்பட்ட குழு இது தொடர்பாக பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் ஏற்கனவே கேள்விகள் கேட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை கடந்த காலத்தில் 45 வீதத்தால் அதிகரித்துள்ளது. முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புச் சலுகைக்கே இவ்வளவு செலவு என்றால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்கள் என்று 'முன்னாள்'களின் மொத்தச் செலவைக் கணக்கிட்டுப் பாருங்கள்!

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## தமிழ் தேசியப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உணரப்படாமலுமில்லை. தமிழ்த் தேசிய சித்தாந்தத்தை சமூக, பொருண்மிய, பண்பாட்டுத் தளங்களில் மக்களுக்கானதாகக் கொண்டு போய்ச் சேர்ப்பதில் எந்த முனைப்பையும் காட்டாத தமிழ்த் தேசிய முலாம் பூசிய அரசியல்வாதிகள், அரசியற் கட்சிகள் மீதான பெரும் அதிருப்தி வெகுவாக மக்கள் மத்தியில் உணரப்பட்டு வருகின்றது.

தென்னிலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தால் ஏற்பட்ட அலையில் தமிழ் மக்களிடையே குறிப்பாக இளையோர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள மாற்றம் குறித்த கரிசனை தமிழ்த் தேசிய அரசியற் பரப்பில் தவிர்த்துப் புறமொதுக்க முடியாதவொன்றாகும்.

தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக்கும், அரசியற் பண்பாட்டிற்கும் முற்றிலும் எதிரான அரசியலை முன்னெடுத்த தமிழ்த் தேசியப் போலிகளை இந்த மண்ணிலிருந்து துடைத்தெறிந்து புதிய தமிழ்த் தேசிய அரசியற் பண்பாட்டை தோற்றுவிப்பதே உண்மையான மாற்றமாகும். மாறாக ஊழல் எதிர்ப்பு, கவர்ச்சி அரசியலினால் தென்னிலங்கைத் தரப்புக்களை தமிழ் அரசியலிற்கு மாற்றாக முன்னிறுத்துவது அரசியல் தற்கொலைக்குச் சமமாகுமம்.

மாற்றம், ஊழல் இளையோர்கள் தான் அரசியலுக்கு வரவேண்டும் எனும் தென்னிலங்கையின் கவர்ச்சி அரசியலினால் வடக்கு - கிழக்கில் நடைபெறும் தொடர் ஆக்கிரமிப்புக்களை மழுங்கடிப்பதும் அதன் மூலம் தென்னிலங்கைத் தரப்புக்களிற்கும், அரசியல் வேலைத்திட்டங்கள் ஏதுமின்றிய சுயேச்சைகளிற்கு வாக்களிப்பதும் தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக்கான பயணத்தை சீர்குலைக்கும் ஒன்றாகும்.

திம்புக் கோட்பாடுகளைப் புறமொதுக்கி தமிழ் மக்களின் அரசியல் வேணவாக்களிற்கு முற்றிலும் முரணான 'இமயமலைப் பிரடகனம்' எனும் பெயரில் தமிழ் மக்களை அரசியல் சூழ்ச்சியொன்றினுள் தள்ளும் முயற்சியென்றும் இடம்பெறுகின்றதென்றும், அது சிறிலங்காவின் ஒற்றையாட்சி அரசமைப்பை ஏற்றுக்கொண்டு, 13ஆவது அரசமைப்புத்திருத்தத்தை தமிழ் மக்களுக்கான தீர்வாக ஆக்குவதற்கு முயற்சிக்கிறது. அது தமிழ் மக்களின் இறைமை அரசியலை தனியே அடையாள அரசியலினுள் சுருக்குவதற்கான கபட முயற்சியாகும - என்றனர்.

## பௌத்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விஹாரையில் இடம்பெற்ற வழிபாடு நிகழ்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

பல நாடுகளில் பௌத்தம் அழிந்து கொண்டிருக்கும் வேளையில், 2500 வருடங்களாக உயிர்த்தியாகம் செய்து பௌத்தத்தை பாதுகாத்தது சிங்களவர்களாகிய நாம் மட்டுமே. அது நமது பாரம்பரியம். காலனியாதிக்க காலத்திலும், அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் இந்த தர்மத்தை போராடி பாதுகாத்தனர். நமது பௌத்தர்கள் நிர்வாணத்தை கைவிட்டு சட்டத்தை பாதுகாத்தனர். முஸ்லிம்கள் ஒரு நாளைக்கு ஐந்து முறை தொழுகிறார்கள். எவ்வளவு நஷ்டம் வந்தாலும் பள்ளிவாசலுக்கு வெள்ளிக் கிழமை செல்கின்றனர். கிறிஸ்தவர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் தேவாலயத்துக்கு செல்கிறார்கள். இந்துக்களும் அப்படித்தான். அவர்களின் நல்ல உதாரணத்தை நாம் ஏன் எடுக்கக்கூடாது என்றார்.

## வியாழேந்திரன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் தெரிவித்ததாவது:

ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி சங்குச் சின்னத்திலே மட்டக்களப்பு மாவட்டத்திலே ஆகக்கூடிய வாக்குகளைப் பெற்று அதிக ஆசனங்களைக் கைப்பற்ற மாமாங்கேஸ்வரர் உறுதுணையாக இருப்பார் என்ற நம்பிக்கையோடு பரப்புரையைத் தொடங்க இருக்கின்றோம்.

மத்தியிலே ஒரு ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. அந்த ஆட்சி மாற்றத்தின் பால் தெற்கிலே மக்கள் அணிதிரளத் தொடங்கியிருக்கின்றார்கள். வடக்கிலே தமிழ்த் தேசியத்திற்காக அணிதிரள இருக்கின்றார்கள்.

மாற்றம் ஒன்று இந்த நாட்டிற்குத் தேவையென தெற்கிலே உள்ள மக்கள் விரும்பியிருக்கின்றார்கள். அதுபோன்று வடக்கு கிழக்கிலே உள்ள மக்களுக்கும் ஒரு மாற்றம் தேவை.

அந்த மாற்றத்தின் அடிப்படையில் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் சங்குச் சின்னத்திற்கு வடகிழக்குத் தமிழ் மக்கள் அமோகமான ஆதரவை வழங்கி மாற்றம் ஒன்றை உருவாக்குவதற்குத் தயாராக இருக்கின்றார்கள்.

வடக்குகிழக்கிலும் ஒருசிலர் என்.பி.பி என்ற முகமூடியுடன் வரும் ஜே.வி.பிக்கு ஆதரவு வழங்குவதற்கு இருக்கின்றார்கள். அவர்கள் ஒன்றை உணர்ந்துகொள்ள வேண்டும். தெற்கிலே இருக்கின்ற மக்களது தேவைகள் வேறு, வடக்கு கிழக்கிலே இருக்கின்ற மக்களது தேவைகள் வேறு. இங்கு ஏற்படப்போகும் மாற்றங்கள் வேறு. தெற்கிலே 'அரகலய' போன்ற மக்கள் எழுச்சி இடம்பெற்றது. அதன் அடிப்படையில் மாற்றம் உருவாகியது.

ஊழலற்ற அரசொன்று உருவாகவேண்டும், நடுத்தர மக்கள் சுதந்திரமாகவும் தன்னிறைவோடும் வாழவேண்டும் என்ற நோக்கத்திலே மாற்றத்தை கொண்டுவந்திருக்கின்றார்கள். ஆனால் வடக்குகிழக்கிலே தமிழ் மக்கள் உரிமையுடன் கூடிய அபிவிருத்தியை, சுயாட்சியை நாங்கள் உறுதிப்படுத்தி எங்கள் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்கான ஒரு மாற்றத்தை எதிர்பார்த்திருக்கின்றார்கள். அந்த மாற்றத்தை ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி மாத்திரமே மாத்திரமே உருவாக்கிக் கொடுக்கும் என்று நான் உறுதியாகக் கூறுகின்றேன்.

தமிழ்த் தேசியம் பேசும் ஏனையவர்கள்கூட கடந்த ஜனாதிபதித் தேர்தலிலே பெரும்பான்மையினக் கட்சிகளுக்குப் பின்னால் அவர்களை வெல்ல வைப்பதற்காகவே பாடுபட்டார்கள். தமிழ் மக்களின் உரிமைகளைப் பெறவேண்டும் என்பதற்கு எதிராகவே செயற்பட்டார்கள்.

வியாழேந்திரனுக்கும் எங்களுக்கும் இடையே எந்த உடன்படிக்கையும் இல்லை. வடக்கு கிழக்கில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணிக்கு மட்டக்களப்பில் மக்களின் ஆதரவு பெருகியிருக்கின்றது. அதனால் தமிழ் தேசியம் பேசும் கட்சிகளும்கூட எமது கூட்டணிக்கும் சங்கு சின்னத்திற்கும் எதிரான பரப்புரைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

வியாழேந்திரன் போட்டியிட்ட கட்சியின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டுள்ளது, அந்த வகையில் அவர் ஆதரவு தருவதாகக் கூறுகின்றார். எவர் ஆதரவு தந்தாலும் நாங்கள் மறுக்கமாட்டோம். யாராவது ஆதரவளிக்கு முன்வரும்போது அதனை வேண்டாம் என்று கூறமுடியாது. அந்த வகையில் வியாழேந்திரன் ஆதரவு தருவதாக கூறியிருக்கின்றார். அவருக்கும் எங்களுக்கும் எந்தவிதமான உடன்படிக்கையும் இல்லையென்பதை உறுதியாக கூறுகின்றேன்.

## விளக்கமறியல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டதாரி எஸ்.பி.எச். எம்.மதுசங்க, மற்றும் கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகர் திலங்க தக்சித சுமதிபால ஆகிரே விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். இந்தச் சுவரொட்டிகளை அச்சடித்த அச்சகத்தின் உரிமையாளர் தசுன் தரங்க பண்டார ஏற்கனவே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## ஆளும்தரப்புக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற தொகுதி அமைப்பாளர்களுடனான கலந்துரையாடலின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தலில் வெற்றி மற்றும் தோல்வி என்பன இயல்பானவை. வெற்றி, தோல்வியை ஏற்றுக் கொள்ளவேண்டும். பல்வேறு காரணிகளால் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்தோம். எம்முடன் இருந்தவர்கள் எம்மைவிட்டு எதிரணி பக்கம் சென்றதால்; பலவீனமடைந்தோம்.

எம்மை விட்டுச் சென்றவர்கள் தற்போது அரசியலில் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளமை கவலைக்குரியது. அவர்கள் எம்முடன் மீண்டும் ஒன்றிணையலாம். அதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம்.

ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவின் ஆளும்தரப்புக்குக் காலவகாசம் வழங்க வேண்டும். ஜனாதிபதி அதிகாரத்துக்கு வந்து 1 மாதம்கூட நிறைவடையவில்லை. ஆகவே விமர்சனங்களை மாத்திரம் முன்வைக்க முடியாது. சிறந்த திட்டங்களை முழுமையாக வரவேற்பேன். இயலுமான ஒத்துழைப்பை வழங்குவேன்.

ஆளும்தரப்பின் அனைத்து செயற்பாடுகளையும் விமர்சித்து அதனை நெருக்கடிக்குள்ளாக்கும் நோக்கம் எமக்கு கிடையாது. ஆளும் தரப்பு நெருக்கடிக்குள்ளானால் , அரச நிர்வாகம் பலவீனமடையும், அதனால் மக்கள்தான் நெருக்கடிக்குள்ளாகுவார்கள். ஆகவே சிறந்த அரச நிர்வாகத்துக்கு ஆளும்தரப்புக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவேன்.

ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க தேர்தல் பரப்புரை மேடைகளில் எம்மீது முன்வைத்த குற்றச்சாட்டுக்களை ஆதாரபூர்வமாக நிரூபிக்க வேண்டும் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்துகிறேன். எம் மீதான குற்றச்சாட்டுக்கள் மீது நம்பிக்கை கொண்டே பெரும்பாலானோர் மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். ஆகவே அந்த மாற்றத்தை நடைமுறையில் செயற்படுத்தவேண்டும் என்றார்.

## அமைச்சர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகிறார்.

அப்போது எதிர்க்கட்சியான தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் எண்ணெய் விலையில் இருந்து கிடைக்கும் பணம் எமது பக்கெற்றுக்குள் செல்வதாகக் கூறியிருந்தார்.

இந்நிலையில் தற்போது அந்தப் பணம் பொறுப்பான அமைச்சர் அநுரகுமாரவின் பாக்கெற்றுக்குள் செல்கிறது என்றே கூற வேண்டும். மக்களுக்கு உண்மையை புரிய வைத்தமைக்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும் என்றார்.

## நாடாளுமன்ற ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சக்தியினதும் ஐக்கிய மக்கள் கூட்டணியினதும் தலைவரான சஜித் பிரேமதாச தலைமையில் நேற்று அவிசாவளையில் இடம்பெற்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் அவிசாவளை தேர்தல் தொகுதி அமைப்பாளர் சுதத் விக்ரமரத்னவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இச்சந்திப்பில் கட்சி செயற்பாட்டாளர்கள் பலர் கலந்து கொண்டனர். இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச நாயண நிதியத்துடன் பேச்சு நடத்தி, மக்களுக்கு கிடைக்கும் நிவாரணங்களை அதிகரித்து, மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள வரிச்சுமையை குறைக்கும் புதிய பயணத்தை நாட்டு மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடன் புதிய ஆளும்தரப்பு கலந்துரையாடியபோதும், இதுவரை மக்கள் மீது சுமத்தப்பட்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர்
Kalaikkathir

# கட்சியின் பிளவுகள் மக்களுக்கான தீர்வுகளாக விரைவில் கிடைக்கும்

## சட்டத்தரணிக்கு.ஜெகசுதன் தெரிவிப்பு




இலங்கை தமிழரசுக் கட்சியின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதில் மக்கள்முன்னிப்பார்கள்என்றநம்பிக்கை தனக்கு இருப்பதாக தமிமிழரசுக் கட்சியின்திகாமடுல்லமாவட்டவேட்பாளர் சட்டத்தரணி குபேந்திரராஜா ஜெகசுதன் குறிப்பிட்டார்.

அம்பாறை அக்கரைப்பற்றில் வியாழக்கிழமை இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு பிளவு தொடர்பில் மக்களிடையே பல விமர்சன கருத்துக்கள் நிலவுகின்றன வேளை நாம் ஒன்றை சிந்திக்க வேண்டும்.

எந்த கட்சிக்ளுக்குள் பிளவில்லை? இலங்கை சுதந்திரக் கட்சி இன்று பிளவு பட்டுள்ளது, ஜே.வி.பி மாற்ற மடைந்து இன்று என்.பி.பி என தோற்றமளிக்கின்றது.

அதேபோன்று நாட்டின் பிரபல தேசிய கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் நிலை என்ன ? இன்று அவை மாற்றமடைந்துள்ளன.

எனவே பிளவு என்பது எங்கிலும் இருக்கின்றது இவ்வாறான கட்சி பிளவு என்பது தற்காலிகமானதே. இவ்வாறான பிளவுகள் புது வடிவத்தில் மக்களுக்கான தீர்வாக இருக்கும்.

அதிகாரத்தை பெற்றுக் கொள்வதற்காகவும் அதனை தக்க வைத்துக்க கொள்வதற்காகவும் அதிகார ரீதியிலான போராட்டத்தில் ஈடுபடும் அரசியல் கட்சிகள் ஒரு கட்சியின் குறைபாட்டை வேறு கட்சி மீது சுமத்தி தங்களுடைய வாக்கு பலத்தை அதிகரிக்கும் முனைவுகளும் முன்னெடுக்கலாம் அத்தகைய சதி திட்டங்களுக்குள் அகப்படாமல் மக்கள் கவனமாக செயற்பட வேண்டும்.

திருக்கோவில் பிரதேச இல்மனைட் அகழ்வு , வைத்தியசாலை பிரச்சினை , வளப்பற்றாக்குறை, கால்நடைகளுக்குரிய மேய்ச்சல் தரை பிரச்சினை எதுவாக இருந்தாலும் சரி எமது பகுதியில் இன்னும் அவற்றுக்கான தீர்வு இல்லை.

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் மக்களது வாக்குகள் வீணடிக்கப்பட்டு திகாமடுல்லயில் தமிழர் பிரதி நிதித்துவம் இழக்கப்பட்டதை போன்று இம் முறையும் அதை பாணியிலான வாக்கு பிரிவு சூழ்ச்சி இடம் பெறுகின்றது.

மக்களது எதிர்பார்ப்பை தமிழரசுக் கட்சி கவனத்தில் கொண்டு இம் முறை படித்த இளைஞர்களை வேட்பாளர்களாக உள் வாங்கியுள்ளதை மக்கள் நன்கு அறிவர். எனவே தற்போதைய நிலையில் மக்கள் ஒரு குடையின் கீழ் ஒரு பிரிவினருக்கு ஆதரவு வழங்கினால் மாத்திரமே வாக்கு பிளவு அடையாமல் பிரதிநிதித்துவம் காக்கப்படும்.

எனவே மக்கள் ஒரு குடையின் கீழ் நின்று திகாமடுல்ல பிரதிநிதித்துவத்தை பாதுகாக்க வேண்டும். - என்றார்.(05)

# எங்களைப் பயன்படுத்தி வியாபாரம் அரசியல்வாதிகளின் நோக்கம் அதுவே

## முன்னாள் போராளிகள் சாட்டை

எங்களைவைத்துவியாபாரம்செய்வதேஅரசியல் வாதிகளின் நோக்கமாக இருப்பதாக முன்னாள் போராளிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளைக் கொண்ட சுயேச்சை குழு தெரிவித்துள்ளது.

எதிர்வரும்நாடாளுமன்றத்தேர்தலில்முன்னாள் போராளிகள்மற்றும்மாற்றுத்திறனாளிகளைக்கொண்ட சுயேச்சைக்குழுவானது அரிக்கன் இலாம்பு சின்னத்தில் போட்டியிடுகின்றது.

இது தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகசந்திப்பு வவுனியாவில் வியாழக்கிழமை இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள்; -

வன்னியில் அவையவங்களை இழந்த பலபோராளிகள் உள்ளனர். அன்றாட உணவுக்கே அவர்கள் சிரமப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. அநாதைகளாக உள்ள அவர்களை இந்த அரசியல் வாதிகள் யாருமே கண்டுகொள்வதில்லை. எம்மை வைத்து வியாபாரம் செய்வதே அவர்களது நோக்கம். எனவே நேரடியாக பாதிக்கப்பட்ட எமக்கே அந்த விடயங்கள் புரியும். எனவே எமது தேவைகளை பூர்த்திசெய்வதற்காக இந்தத் தேர்தலில் நாம் நிற்கிற்றோம். - என்றனர்.

(05)

# தொடருந்து மோதி 2 யானைகள் சாவு; மட்டு – கொழும்பு சேவைகள் பாதிப்பு

கொலன்னாவை எண்ணெய் சேமிப்பு நிலையத்திலிருந்து மட்டக்களப்புநோக்கிஎரிபொருளை ஏற்றிச் சென்ற ரயிலில் காட்டு யானைக் கூட்டம் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

கல்லோயா - ஹிங்குரான்கொடை ரயில் நிலையங்களுக்கு இடைப்பட்ட பகுதியில் நேற்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை 3.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் இரண்டு காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதுடன், மேலும் பல காட்டு யானைகள் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளது.

ரயிலின் நான்கு எரிபொருள் தாங்கிகள் தடம்புரண்டுள்ளதுடன் இரண்டு எரிபொருள் தாங்கிகள் கவிழ்ந்துள்ளது. அத்துடன் ரயிலின் இயந்திர சாரதி மற்றும் கட்டுப்பாட்டாளர் பயணித்த ரயில் பெட்டிகளும் தடம்புரண்டுள்ளன.



இதேவேளை, மட்டக்களப்பு - கொழும்பு பிரதான மார்க்கத்தில் இயங்கும் ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளதுடன் இன்று காலை கொழும்பு கோட்டையிலிருந்து - மட்டக்களப்பு வரை இயக்கப்படவிருந்த ரயில் சேவையையும், மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கி இயக்கப்படவிருந்த ரயில் சேவையையும் இரத்து செய்ய ரயில்வே திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. (05)

# தமிழ் அரசுக் கட்சி தேர்தல் செயற்பாட்டு அலுவலகம் மன்னாரில் திறந்துவைப்பு





நாடாளுமன்ற தேர்தலுக்கான தமிழரசு கட்சியின் மன்னார் மாவட்டத்திற்கான பிரதான கட்சி அலுவலகம் வியாழக்கிழமை மாலை மன்னார் தாழ்வுபாடு பிரதான வீதியில் வைபவ ரீதியாக தமிழரசு கட்சி வேட்பாளர் சட்டத்தரணி செல்வராஜ் டினேஸனால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் முகமாகவும் கட்சி சார்ந்த தேர்தல் செயற்பாடுகளை முன்னெடுக்கும் முகமாகவும் மேற்படி காரியாலயம் திறந்து வைக்கப்பட்டிருந்தது.

அதேநேரம் தமிழரசு கட்சியின் இளைஞர்களுக்கான கூட்டமும் மன்னார் தனியார் விடுதியில் இடம் பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள தேவன்பிட்டி,வட்டகண்டல், வெள்ளி மலை, சாந்திபுரம், தலைமன்னார், பேசாலை, முருங்கன் உள்ளடங்களாக பல கிராமங்களை சேர்ந்த இளைஞர்கள் குறித்த ஒன்றுகூடலுக்கு வருகை தந்து தங்களது ஆதரவை வெளிப்படுத்தியிருந்தனர்.

அதேநேரம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வைத்தியருமான சிவமோகன், குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு இவ் வருடம் தேர்தலுக்கான ஆதரவை சட்டத்தரணி செல்வராஜா டினேஸனுக்கு வழங்கியிருந்தார்.(05)

# தம்பலகாமத்தில் வாய் தகராறு கைகலப்பாக மாறி ஒருவர் சாவு

திருகோணமலை தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோயிலடி பகுதியில் நண்பர்களுக் கிடையில் ஏற்பட்ட வாய்தர்க்கம் காரணமாக ஏற்பட்ட கைகலப்பால் ஒருவர் வியாழக்கிழமை மாலை உயிரிழந்துள்ளார் என தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர். இவ்வாறு உயிரிழந்தவர் கோயிலடி தம்பலகாமத்தை சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான 35 வயதுடையவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது -

குடி போதையில் வாய்தகராறில் ஈடுபட்ட நிலையில் கைகலப்பாக மாறி தாக்குதலால் இவர் கடந்த புதன்கிழமை திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

இந்நிலையில்சிகிச்சைபலனின்றிவியாழக்கிழமை மாலை உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய கோயிலடி தம்பலகாமம் பகுதியை சேர்ந்த 22,36 வயதுடைய இருவரை தம்பலகாமம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரனைகளை தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.(05)

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# தேசியப் போலிகள் யார்? அடையாளம் காட்டுங்கள்

தேசியப் போலிகளை 2024 நாடாளுமன்றத் தேர்தலில் தோற்கடிக்கவேண்டும்என்றும்யாழ்ப்பாணப்பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இரண்டாவது தடவையாகவும் வலியுறுத்தியுள்ளது.

தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக்கும், அரசியற் பண்பாட்டிற்கும் முற்றிலும் எதிரான அரசியலை முன்னெடுத்த தமிழ்த் தேசியப் போலிகளை இந்த மண்ணிலிருந்து துடைத்தெறிந்து புதிய தமிழ்த் தேசிய அரசியற் பண்பாட்டை தோற்றுவிப்பதே உண்மையான மாற்றமாகும் என்றும் மாணவர் ஒன்றியம் வலியுறுத்தி–யுள்ளது.

ஊழல்எதிர்ப்பு, கவர்ச்சிஅரசியலினால்தென்னிலங்கைத் தரப்புக்களைதமிழ்அரசியலிற்குமாற்றாகமுன்னிறுத்துவது அரசியல் தற்கொலைக்குச் சமம் என்றும் குறிப்பிடும் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகமாணவர்ஒன்றியப்பிரதிநிதிகள், தென்னிலங்கையிலிருந்து அது வருவதில்லை என்று தெரிவித்தனர்.

’’சிங்கள – பௌத்த பேரினவாதம் முழுவீச்சில் செயற்படுவதற்கான வாய்ப்புக்களைப் பொருளாதார நெருக்கடி தற்காலிகமாக மட்டுப்படுத்தியுள்ள நிலையில் சிங்கள மக்கள் மாற்றமொன்றினை எதிர்பார்த்து வாக்களித்துள்ளனர். எனினும் சிங்கள மக்களின் வாக்களிப்பு முறைக்கு நேர்மாறாக வாக்களித்ததன் மூலம் எம்மிடையே நிலவுவது பொருளாதார நெருக்கடி மட்டுமல்ல என்பதை தமிழ் மக்கள் தெளிவாக எடுத்துரைத்துள்ளனர்.

15 ஆண்டுகளாக தலைமைத்துவ வெற்றிடம் நிலவும் வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தில் தெற்கில் ஏற்பட்டுள்ள ஊழலற்ற ஆட்சி, இளையோர்களின் அரசியற் பங்கேற்பு உள்ளிட்டவைகளின் தாக்கம் உணரப்படாமலுமில்லை. தமிழ்த் தேசிய சித்தாந்தத்தை சமூக, பொருண்மிய, பண்பாட்டுத் தளங்களில் மக்களுக்கானதாகக் கொண்டு போய்ச் சேர்ப்பதில் எந்த முனைப்பையும் காட்டாத தமிழ்த் தேசிய முலாம் பூசிய அரசியல்வாதிகள், அரசியற் கட்சிகள் மீதான பெரும் அதிருப்தி வெகுவாக மக்கள் மத்தியில் உணரப்பட்டு வருகின்றது.

தென்னிலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தால் ஏற்பட்ட அலையில் தமிழ் மக்களிடையே குறிப்பாக இளையோர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள மாற்றம் குறித்த கரிசனை தமிழ்த் தேசிய அரசியற் பரப்பில் தவிர்த்துப் புறமொதுக்க முடியாதவொன்றாகும்.

திம்புக் கோட்பாடுகளைப் புறமொதுக்கி தமிழ் மக்களின் அரசியல் வேணவாக்களிற்கு முற்றிலும் முரணான ’இமயமலைப் பிரடகனம்’ எனும் பெயரில் தமிழ் மக்களை அரசியல் சூழ்ச்சியொன்றினுள் தள்ளும் முயற்சியென்றும் இடம்பெறுகின்றதென்றும், அதுசிறிலங்காவின்ஒற்றையாட்சி அரசமைப்பை ஏற்றுக்கொண்டு, 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை தமிழ் மக்களுக்கான தீர்வாக ஆக்குவதற்கு முயற்சிக்கிறது. அது தமிழ் மக்களின் இறைமை அரசியலை தனியே அடையாள அரசியலினுள் சுருக்குவதற்கான கபட முயற்சியாகும்” –என்றும் மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

தேசியப் போலிகளை புறமொதுக்கவேண்டும் என்று மாணவர்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றபோதும் யார் தேசியப் போலிகள் என்று அடையாளப்படுத்த அவர்கள் மறுக்கின்றனர். இந்த விளையாட்டைவிட்டுவிட்டு மக்கள் யாருக்கு வாக்களிக்கக்கூடாது என்று அவர்கள் கருதுகின்றார்களோ அவர்களை நேரடியாக அடையாளம் காட்டும் தற்றுணிபை அவர்கள் இனியாவது பெறட்டும்.



# அமெரிக்க படை அதிகாரி ஏன் வந்தார்?

**உபுல் ஜோசப் பெர்னாண்டோ**

2022 இல் ரணில் ஜனாதிபதியான பின்னர், சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து முதல் தவணைக் கடனைப் பெறுவதற்கு சிறிது காலம் பிடித்தது. இந்தத் தாமதத்தை முதல் தவணையை பெறுவதில் நிச்சயமற்ற நிலை ஏற்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இந்த நிச்சயமற்ற நிலைக்கு மத்தியில், இந்தோ–பசிபிக் பாதுகாப்பு விவகாரங்களுக்கான அமெரிக்க முதன்மை துணைப் பாதுகாப்புச் செயலாளர் ஜெடிடியா ரோயல் இலங்கை வந்து ரணிலைச் சந்தித்தார். சிஐஏவின் தலைவர் இரகசியமாக இலங்கை வந்து ரணிலைச் சந்தித்தார் என்று வெளிநாட்டு ஊடகங்களும் செய்தி வெளியிட்டன. இந்தச் சந்திப்புகளைத் தொடர்ந்து ரணில் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து முதல் தவணைக் கடனைப் பெற்றுக்கொண்டார்.

அரகலய (மக்கள் போராட்டம்) காலத்தில் சீனாவின்கடன்பொறியால்நாடுதிவாலாகிவிட்டதாகக் கூறி சிஐஏ தலைவர் இலங்கை வந்தார் எனக்கூறி ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இதன்போது இலங்கையில் ஜே.வி.பி (ஜனதா விமுக்தி பெரமுன) எழுச்சி பெறுவது குறித்து சிஐஏ தலைவருக்கு ரணில் விளக்கமளித்தார் எனவும், ஜே.வி.பி ஆட்சிக்கு வருவதை தடுக்க சர்வதேச நாணய நிதியத்தின் உதவி அவசியம் என்று தெரிவித்தார் என்றும் ரணிலுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன. எனினும், ரணிலின் கணிப்பு அனுர ஜனாதிபதியான பின்னர் உறுதியானது.

அநுர ஜனாதிபதியாகப் பதவியேற்ற மூன்று வாரங்களில், சர்வதேச நாணய நிதியத்தின் மூன்றாவது மீளாய்வு மற்றும் அடுத்த தவணைக் கடன் தாமதமாகலாம் என கணிக்கப்பட்டபோது, அமெரிக்க அட்மிரல் ஒருவர் இலங்கைக்கு வருகை தந்தார். சிஐஏ தலைவரும், முதன்மை துணை உதவிச் செயலாளரும் இலங்கைக்கு வந்து ரணிலைச் சந்தித்த பின்னர் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து முதல் தவணை பெறப்பட்டதால், சர்வதேச நாணய நிதியத்தின் கடன்களுக்கும் அமெரிக்கக் கொள்கைக்கும் இடையே தொடர்பு இருப்பதாக நம்ப இடமுண்டு.

அநுர ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் முதன்முறையாக சீன இராணுவக் கப்பல் ஒன்று இலங்கைக்கு வந்தது. சீன இராணுவக் கப்பல் வந்ததைத் தொடர்ந்து, அமெரிக்க பசுபிக் கடற்படைத் தளபதி கடற்படை அட்மிரல் இலங்கை வந்து அநுரகுமாரவைச் சந்தித்தார். தனது பயணத்தின்போது, மறைமுகமாக சீனாவை குறிவைத்து விதி அடிப்படையிலான சர்வதேச ஒழுங்கை ஆதரிக்க வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். இந்தச் சந்திப்பின்போது அவர்சீனாகுறித்துஅநுரவுடன்கலந்துரையாடினார் என்பது தெளிவாகத் தெரியவில்லை, ஆனால் ஜனாதிபதி ஊடகப் பிரிவின் உத்தியோகபூர்வ அறிக்கைகள் சந்திப்பில் அநுரவின் பதில் சாதகமாக இருந்ததாகக் கூறுகின்றன.


அநுர ஜனாதிபதியாக பதவியேற்றதிலிருந்து, அமெரிக்க, இந்திய மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளின் வருகைகள் கணிசமான கவனத்தைப் பெற்றன, ஆனால் அநுராவிற்கும் சீனாவிற்கும் இடையிலான தொடர்புகள் பற்றிய தகவல்கள் எதுவும் இல்லை. ஜே.வி.பி. வேண்டுமென்றே அமெரிக்க மற்றும் இந்திய உறவுகளை மேம்படுத்துகிறது, அதேநேரத்தில் சீன உறவுகளை குறைத்து மதிப்பிடுகிறதா என்பது தெளிவாக இல்லை. அநுர ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர் சீன இராணுவ பாய்மரக் கப்பலே இலங்கைக்கு வந்தது. எந்தச் சீன உயர் அதிகாரியும் வரவில்லை.

ரணிலின் ஆட்சியில் விதிக்கப்பட்ட சீனக் கப்பல்களுக்கான தடை காலாவதியாகவுள்ள இந்த வருட இறுதிக்குள் அனுரவுக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவின் விவரம் தெளிவாகிவிடும். அநுர இந்தத்தடையைநீடிப்பாராஅல்லதுநீக்குவாரா என்பது வருட இறுதிக்குள் தீர்மானிக்கப்படும். அந்தநேரத்தில், அநுரா அமெரிக்கா மற்றும் இந்தியாவுடன் அதிகம் இணைந்திருப்பாரா அல்லது சீனாவுடன் இணைந்தாரா என்பதும் தெளிவாகிவிடும்.



காலைக்கதிர் Kalaikkathir

# கட்சிகளின் எதிர்பார்ப்பு



எதிர்வரும் பொதுத்தேர்தலில் வீடு சின்னத்தில் போட்டியிடும் தமிழ் அரசுக் கட்சியால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 15 இற்கு குறையாமல் ஆசனங்களை வென்றெடுக்க முடியும் என அக்கட்சியின் வேட்பாளர் எம்.ஏ.சுமந்திரன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அதேவேளை சங்கு சின்னத்தில் போட்டியிடும் தமது கூட்டணி இவ்விரு மாகாணங்களிலும் மொத்தமாக 6 - 8 ஆசனங்களை வெல்லும் என எதிர்பார்ப்பதாக ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் வேட்பாளர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று இம்முறை தேர்தலில் தமது கட்சி 10 இற்கு குறையாத ஆசனங்களைப் பெறவேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் இருப்பதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறிப்பிட்டுள்ளார்.

பொதுத்தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தல் மற்றும் வேட்புமனுத்தாக்கல் என்பன கடந்த வாரத்துடன் முடிவுக்கு வந்த நிலையில், தற்போது அரசியல் கட்சிகள் நாடளாவிய ரீதியில் தமது தேர்தல் பிரசாரப்பணிகளை முன்னெடுத்துவருகின்றன.

அந்த வகையில் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அவர்களது தேர்தல் பிரசார நடவடிக்கைககளைத் தீவிரமாக முன்னெடுத்துவருகின்றனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் வடக்கு, கிழக்கு ஆகிய இரண்டு மாகாணங்களில் இருந்தும் நாடாளுமன்றத்துக்குப் பிரதிநிதிகளை அனுப்பக்கூடிய கட்சியாக தமிழ் அரசுக் கட்சி இருப்பதாகவும், ஆகவே எதிர்வரும் பொதுத்தேர்தலில் தம்மால் 15 இற்கு மேற்பட்ட ஆசனங்களைக் கைப்பற்றமுடியும் எனவும் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி உள்ளடங்கலாக ஏனைய தமிழ்த் தேசிய கட்சிகளின் வேட்பாளர்கள் தமது பிரசாரங்களின்போது பெரும்பாலும் 'ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி சங்கு சின்னத்தைக் களவெடுத்துவிட்டது' என்ற விடயத்தையே கூறிவருவதாகவும், இது அக்கட்சிகள் சங்கு சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களைக் கண்டு அச்சமடைந்திருப்பதையே காண்பிப்பதாகவும் சங்கு சின்னத்தில் போட்டியிடும் தர்மலிங்கம் சித்தார்த்தன் சுட்டிக்காட்டியுள்ளார்.(05)

# தேங்காயின் விலைகள் நாளுக்கு நாள் எகிறல்



சந்தையில் தேங்காய் விலை உயர்ந்துள்ளதுடன், சில பிரதேசங்களில் ஒரு தேங்காய் 150 ரூபாவிற்கும் அதிகமாக விற்பனை செய்யப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, தேங்காய் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் சில பகுதிகளில் தேங்காய் மொத்த விலை 160 இற்கு கிடைப்பதாகவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

சந்தையில் தேங்காய் விலை குறைவதற்கான எந்த அறிகுறியும் தற்போது காணப்படவில்லை எனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (05)

# இறக்குமதி உணவுப் பொருள்கள் சிலவற்றின் வரிகள் அதிகரிப்பு

ஒக்ரோபர் மாதம் 14 ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை நாட்டில் இறக்குமதிசெய்யப்படும் உணவுப்பொருள்கள் சிலவற்றின் வரிகள் அதிகரிக்கப்படும் என ஆளும்தரப்பு தெரிவித்துள்ளது.

அதன்படி, ஒரு கிலோ சிவப்பு பருப்பு மற்றும் மஞ்சள் பருப்பு ஆகியவற்றிற்கு 25 ரூபா வரி விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஒரு கிலோ கிராம் மாசி மற்றும் அதற்குப் பதிலான பொருள்களுக்காக 302 ரூபா விசேட வர்த்தக பண்ட வரி விதிக்கப்பட்டுள்ளது. எலும்பு நீக்கப்பட்ட மீன் மற்றும் பிற மீனின் இறைச்சியைத் தவிர, புதிய அல்லது உறைந்த மீன்கள் ஒரு கிலோவிற்கு 10 வீத அல்லது 400 ரூபா என்ற உச்சபட்ச வரிக்கு உட்பட்டுள்ளது.(05)

# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு புதிய தலைவர்

## கபில செனவிரத்ன நியமனம்

பல்கலைக்கழகமானியங்கள்ஆணைக்குழுவின் தலைவராக சிரேஷ்ட பேராசிரியர் கபில செனவிரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவராக இருந்த சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க தனது பதவியை இராஜினாமா செய்ததையடுத்து புதிய தலைவர் நியமிக்கப்பட்டுள்ளார்.(05)




காலைக்கதிர் Kalaikkathir

# மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு வாழைச்சேனையில் நேற்று பேரணி



'புற்றுநோயிலிருந்து பாதுகாப்போம்' என்ற தொனிப்பொருளில் மார்பகபுற்றுநோய் விழிப்புணர்வு பேரணி வாழைச்சேனை பொதுச்சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் நேற்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்றது.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார திணைக்களமும் இலங்கை புற்றுநோய் சங்கத்தின் மட்டக்களப்பு கிளையும் இணைந்து இந்தப் பேரணியை ஏற்பாடு செய்திருந்தன.

இந்த விழிப்புணர்வு பேரணியானது வாழைச்சேனை இந்து கல்லூரி முன்பாக ஆரம்பமாகி, கல்குடா வீதி மற்றும் பிரதான வீதி வழியாக வாழைச்சேனை பொது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் வரை முன்னெடுக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, வாழைச்சேனை பிரதேச சபை முன்பாக பெண்களுக்கு ஏற்படும் மார்பக புற்றுநோயிலிருந்து அவர்களைப் பாதுகாப்பது தொடர்பாக விழிப்புணர்வு நாடகம் நடைபெற்றது.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆர்.முரளீஸ்வரன் தலைமையிலான இந்த விழிப்புணர்வு நடைபயணத்தில் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலை, வாழைச்சேனை, ஓட்டமாவடி, கோறளைப்பற்று மத்தி, கிரான் ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள், வாழைச்சேனை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச சபை உத்தியோகத்தர்கள், பொலிஸார் மற்றும் தனியார் நிறுவனம் மற்றும் பெண்கள் அமைப்பினர் கலந்துகொண்டனர்.

நடைபயணநிறைவில் வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் மார்பக புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வூட்டல் கருத்தரங்கும் நடைபெற்றது. (05)



# சவூதி அரேபியா விபத்தில் சிக்கிய இலங்கைப் பெண் நாடு திரும்பினார்

சவூதி அரேபியாவிற்கு வீட்டுப் பணிப் பெண்ணாக சென்று வாகன விபத்தில் சிக்கி காயமடைந்து பெண் சிகிச்சை பெற்று நேற்று (வெள்ளிக்கிழமை) காலை நாடு திரும்பியுள்ளார்.

இந்த பெண் பெலியத்த, கெடமான்ன பிரதேசத்தை சேர்ந்த 44 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயாவார். இவர் சார்ஜாவில் இருந்து நேற்று காலை 04.25 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இந்த பெண் கட்டுநாயக்க விமான நிலையத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் –

'நான் பெலியத்த, கெடமான்ன பிரதேசத்தில் வசிக்கிறேன். எனக்கு மூன்று பிள்ளைகள் இருக்கின்றனர். எங்களுக்கு தகவுடன் கூடிய வசதியான வீடு இல்லை.

இதன் காரணமாக, நான் கடந்த ஒகஸ்ட் மாதம் 17ஆம் திகதி அன்று கொழும்பு மருதானை பகுதியில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் உதவியுடன் சவூதி அரேபியாவிற்கு வீட்டுப் பணிப் பெண்ணாக சென்றேன்.

நான் சவூதி அரேபியாவை சென்றடைந்த போது என்னை அழைத்து செல்ல விமான நிலையத்திற்கு வாகனம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது.

அந்த வாகனத்தில் சிறிது தூரம் பயணித்துக் கொண்டிருந்த போது வாகனம் விபத்துக்குள்ளானது.

விபத்தில் நான் படுகாயமடைந்து சவூதி அரேபியாவில் உள்ள வைத்தியசாலை ஒன்றில் சேர்க்கப்பட்டேன்.

வைத்தியசாலையில் இருந்த வைத்தியர்கள், இந்த உடல் நிலைமையில் உங்களால் வேலை செய்ய முடியாது. அதனால் நீங்கள் மீண்டும் இலங்கைக்கு செல்ல வேண்டி வரும் என என்னிடம் கூறினர்.

என்னை இலங்கைக்கு அழைத்து வர கொழும்பு, மருதானை பகுதியில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் என்னிடம் ஐந்து லட்சம் ரூபாவைக் கேட்டது.

பின்னர், இலங்கை மனித உரிமைகள் அமைப்பின் தலைவர் கலாநிதி சரத் ஜயந்த பீரிஸ் மற்றும் பல அதிகாரிகள் இணைந்து என்னை இலங்கைக்கு அழைத்து வர உதவி செய்தனர். - எனத் தெரிவித்தார்.(05)

# தமிழ் அரசியல் பரப்பில் முற்றுமுழுதான மாற்றமே மதத் தலைவர்களின் விருப்பம்

## மணிவண்ணன் கூறுகிறார்

தமிழ் அரசியல் பரப்பில் முற்றுமுழுதான மாற்றத்தையே மத தலைவர்களும் விரும்புகிறார்கள் என தமிழ் மக்கள் கூட்டணியில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் மான் சின்னத்தில் முதன்மை வேட்பாளராக போட்டியிடும் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் கூட்டணியினர் நல்லை ஆதீன குருமுதல்வர் மற்றும் யாழ். மறைமாவட்ட ஆயர் ஆகியோரை நேரில் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டனர்.

தமிழ் மக்கள் கூட்டணியில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் முதன்மை வேட்பாளரான சட்டத்தரணி வி.மணிவண்ணன் தலைமையில் சக வேட்பாளர்கள் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை நல்லை ஆதீனத்துக்கு சென்று, குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளை சந்தித்து ஆசீர்வாதம் வாங்கியதுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

அதனை தொடர்ந்து, ஆயர் இல்லத்துக்கு சென்றவர்கள் ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையை சந்தித்து ஆசீர்வாதம் வாங்கியதுடன், கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர்.

இந்த சந்திப்பின் பின்னர், மணிவண்ணன் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

நல்லை ஆதீன குருமுதல்வரை சந்தித்து, ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டோம். அவருடனான கலந்துரையாடலின் போது, அவர் தற்போதைய அரசாங்கம் தமிழ் மக்களை ஏமாற்றிவிட்டதாகவும், அவர்களின் போக்குகள் மாறிவிட்டன எனவும் எம்மிடம் குறைபட்டுக்கொண்டார்.

மேலும், தமிழ் அரசியல் பரப்பில் மாற்றம் ஒன்று நிகழ வேண்டும் என தான் விரும்புவதாக சொன்னார்.

அவரை தொடர்ந்து யாழ். ஆயரை சந்தித்து ஆசீர்வாதம் வாங்கினோம். அவரும் முற்று முழுதான மாற்றத்தையே விரும்புகிறார். நாமும் அதனை வரவேற்று , எமது வேட்பாளர்கள் தொடர்பிலும் அவர்களின் தகைமைகள், ஆளுமைகள் தொடர்பிலும் எடுத்துக்கூறி இருந்தோம்.

மத தலைவர்கள் போன்று தமிழ் மக்களும் மாற்றத்தையே விரும்புகிறார்கள். அதனால் எமக்கு வாக்களித்து மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என மணிவண்ணன் தெரிவித்தார்.

மேலும், மத தலைவர்களின் ஆசீர்வாதங்களுடன் நேற்று முதல் எமது கட்சியின் பிரசாரப் பணிகளில் ஈடுபடுவார்கள் எனவும் தெரிவித்தார். (05)

## மாவட்டங்களுக்கு இடையே

# பன்றிகளைக் கொண்டு செல்வதற்குத் தடை

பன்றிகள் வைரஸ் தொற்று பரவலால் பாதிக்கப்பட்டு வருவதால் மாவட்டங்களுக்கு இடையே பன்றிகளைக் கொண்டுசெல்வது நேற்று (வெள்ளிக்கிழமை) முதல் தடை செய்யப்பட்டுள்ளது என கால்நடை உற்பத்தி, சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் ஹேமாலி கொத்தலாவல தெரிவித்துள்ளார்.

நோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த பன்றிகளின் இறைச்சியை பொதுமக்கள் உண்ண அனுமதியில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேல் மற்றும் வடமேல் மாகாணங்கள் உட்பட மேலும் சில மாகாணங்களிலும் பன்றிகளிடையே வைரஸ் பரவி வருவதாகவும் இந்த வைரஸை கட்டுப்படுத்த தடுப்பூசி செலுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் கால்நடை உற்பத்தி, சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.(05)

# போதைப்பொருள்களுடன் காலியில் களியாட்டம்

## 12 பேர் கைது

காலி, பெந்தோட்டை பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் போதைப்பொருளுடன் களியாட்ட நிகழ்வொன்றை நடத்தியதாக கூறப்படும் யுவதி உட்பட 12 பேர் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டதாக பெந்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

பெந்தோட்டை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

களுத்துறை, பெந்தோட்டை மற்றும் அளுத்கம ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த யுவதியும் 11 இளைஞர்களுமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து ஐஸ் மற்றும் கஞ்சா உள்ளிட்ட பல்வேறு போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பெந்தோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# கலென்பிந்துனுவெளவில் சட்டவிரோத டீசல் விற்பனை செய்தவர் கைதானார்

அநுராதபுரம், கலென்பிந்துனுவெள பிரதேசத்தில் அனுமதிப்பத்திரம் இன்றி சட்டவிரோதமான முறையில் டீசல் விற்பனை செய்ததாக கூறப்படும் சந்தேக நபரொருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அநுராதபுரம் விமானப்படை புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கலென்பிந்துனுவெள, மொரகொட மீகஸ்வெள பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கலென்பிந்துனுவெள பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதுடையவர் ஆவார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 1,225 லீற்றர் டீசல் மற்றும் பல்வேறு உபகரணங்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. இதனையடுத்து, சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக மொரகொட பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (05)




காலைக்கதிர் Kalaikkathir

# விளையாட்டு கட்டட தொகுதி வவுனியாவில் திறந்து வைப்பு



வவுனியா ஓமந்தையில் சர்வதேச தரத்திலான விளையாட்டுக் கட்டட தொகுதி நேற்று (வெள்ளிக்கிழமை) திறந்து வைக்கப்பட்டது.





கடந்த 2015 ஆம் ஆண்டு சுமார் 16 கோடி ரூபாநிதிஒதுக்கப்பட்டுஆரம்பித்துவைக்கப்பட்ட சர்வதேச தரத்திலான விளையாட்டு கட்டடத் தொகுதி நீண்ட காலமாக அபிவிருத்திப் பணிகள் இடைநிறுத்தப்பட்டு காணப்பட்டன.

இந்நிலையில் கடந்த அரசாங்க காலத்தில் மீளவும் நிதி ஒதுக்கப்பட்டு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வந்திருந்தன.



இதன்பிரகாரம்குறித்தகட்டடத்தொகுதியில் உள்ளக விளையாட்டு அரங்கு மற்றும் நீச்சல் தடாகம் என்பன மேலும் சுமார் 14 கோடி ரூபா ஒதுக்கப்பட்டு முழுமையாக சுமார் 30 கோடி ரூபா செலவில் புனரவைக்கப்பட்டு நேற்று உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் விளையாட்டு துறை அமைச்சின் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் ரியல் அட்மிரல் செமால் பெர்னாண்டோ, உதவி பணிப்பாளர் கே. டபிள்யு. டி. கே.கொஸ்தா மற்றும் வவுனியா அரசாங்க அதிபர் பி.எஸ். சரத்சந்திர ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டு கட்டடத் தொகுதியைத் திறந்து வைத்திருந்தனர்.(05)

# காணாமல்போன ஓட்டோ சாரதி கால்வாயிலிருந்து சடலமாக மீட்பு

பொலன்னறுவை, அரலகங்வில பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கால்வாயிலிருந்து ஓட்டோ சாரதி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்; எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்ட ஓட்டோ சாரதி பொலன்னறுவை, அரலகங்வில, பிம்புரத்தேவ பிரதேசத்தைச்சேர்ந்த 50 வயதுடையவராவார்.

ஓட்டோ சாரதி கடந்த 16 ஆம் திகதியிலிருந்து காணாமல் போயுள்ளார் என பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு கிடைத்துள்ளது.

இதனை அடுத்து முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கையில், சாரதி கால்வாயிலிருந்துசடலாமாகமீட்கப்பட்டுள்ளார்.

ஓட்டோ, சடலம் மீட்கப்பட்ட இடத்திலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தொலைவில் வைத்துக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட சடலமானது பொலன்னறுவை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பானமேலதிகவிசாரணைகளை அரலகங்வில பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# குடாநாட்டு சுயேச்சை குழு 13 தேர்தல் அறிக்கை வெளியீடு



யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் தமிழ் இளையோர் கூட்டமைப்பாக சுயேச்சை குழு 13 இல் கரும்பலகை சின்னத்தில் போட்டியிடும் சுயேச்சை குழுவின் தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று (வெள்ளிக்கிழமை) யாழில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

தமிழ்தேசத்தின்வரலாற்றில்மாணவப் போராளியாகப் போராடி தன்னுயிர் நீத்த முதல் தற்கொடையாளன்தியாகிபொன். சிவகுமாரனின் உரும்பிராயில் உள்ள நினைவிடத்தில்சுயேவசை குழுவின்முதன்மை வேட்பாளர் யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர் ஒன்றிய முன்னாள் தலைவர் கி. கிருஸ்ணமீனன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் திருவுருவ சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியதுடன், சிவகுமாரனின் சகோதரியிடம் தேர்தல் விஞ்ஞாபனத்தை கையளித்து, தமது தேர்தல் பிரசாரங்களை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துள்ளனர்.(05)




## நாடாளுமன்ற ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ள நேரடி மற்றும் மறைமுக வரிகளை குறைக்க அதனால் முடியாதுபோயுள்ளது. விதிக்கப்பட்ட வரிகள் அவ்வாறே அறவிடப்படுகின்றன.

தற்போதைய ஆட்சியாளர்களும் சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாட்டை அவ்வாறே தொடர்கின்றனனர். தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளை ஆளும்தரப்பு மறந்துவிட்டது.

ஆகவேதான், நிதி அதிகாரம் கொண்ட நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை அதிகாரத்தினை எமக்கு வழங்குமாறு நாம் கோருகின்றோம். எமது அதிகாரத்தின் கீழ் நாடாளுமன்றத்தினை முன்னெடுத்துச் செல்ல முடியும்.

நாம் அதிகாரத்தினைப் பெறுகின்றபோது, நிச்சயமாக சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்துவோம். சாதாரண மக்களைப் பாதிக்கும் வரிகளைக் குறைப்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுப்போம்.

ஜனாதிபதிபிறிதொருகட்சியாகஇருந்தாலும், நாம் நாடாளுமன்றத்தின் அதிகாரத்தினைப் பெறுகின்றபோது அவருடன் இணைந்து பயணிப்பதில் எவ்விதமான பிரச்சினைகளும் இல்லை.

ஆகவே ஜனாதிபதியின் கட்சிக்குத் தான் நாடாளுமன்றிலும் அதிகாரம் வழங்க வேண்டும் என்று கருதவேண்டிய அவசிய மில்லை என்றார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பேச்சாளருமான எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாடு வீழ்ச்சியடைவதைத் தடுப்பதற்கு சமநிலையான நாடாளுமன்றம் இருக்க வேண்டும். தற்போது அநுரகுமார திசநாயக்க ஜனாதிபதியாகியுள்ளார். எனவே பிரதான எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தியை வெற்றிபெறச்செய்வதற்கு முயற்சிக்கின்றோம். ஆனால் இன்று வெற்றியை உறுதிப்படுத்த முடியாதவர்களே எதிர்க்கட்சியாவதைப் பற்றி பேசிக்கொண்டிருக்கின்றனர்.

கோட்டாபய ராஜபக்சவுக்கு அதியுயர் பலத்தை வழங்கியதன் காரணமாகவே அவர் இரசாயன உரத்துக்கு தடை விதித்தார். அது மாத்திரமின்றி பணம் அச்சிடப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்துக்குச் செல்வதை நிறுத்தி, பணவீக்கத்தை அதிகரித்து நாட்டை வங்குரோத்து நிலைமைக்கு தள்ளுவதற்கு இந்தத் தீர்மானங்களே ஏதுவாக அமைந்தன. எனவே, அரசியலை விட நாடு வீழ்ச்சியடைவதை தடுப்பதே முக்கியமாகும்.

பொருளாதார ரீதியிலும், கலாசார ரீதியிலும் நாடு முன்னேற்றமடைய வேண்டுமெனில் சமநிலையான நாடாளுமன்றம் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

முன்னாள்ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க அரசியல்முறைமைமாற்றமடையவேண்டும் எனக் கூறிக்கொண்டிருந்தார். ஆனால், தற்போது ராஜபக்சக்களுக்கு மீண்டும் வாக்களிக்குமாறு கூறுகின்றார்.

ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் வழங்கிய முடிவிலிருந்துநாட்டுக்குஎன்னதேவைஎன்பது தெளிவாகத் தெரிகின்றதல்லவா? முன்னாள் ஜனாதிபதி ரணிலுடன் இருப்பவர்கள் அவர் மீண்டும் ஜனாதிபதியாக வேண்டும் என்று எண்ணுகின்றனர். ஆனால், அவருக்கு வாக்களித்த மக்களுக்கு அவர் தொடர்பில் எவ்வித எதிர்பார்ப்பும் இல்லை.

ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தமது கோபத்தை வெளிப்படுத்தியிருக் கின்றனர். எனவே தேசிய மக்கள் சக்தி எதிர்க் கட்சியிலிருந்தபோதுபேசிக்கொண்டிருந்ததைப் போன்று, இனியும் இருக்க முடியாது. அன்று தேர்தல்பரப்புரை மேடைகளில்பேசியவற்றை செயற்படுத்தவேண்டும். வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படும் அரச சொத்துக்களை மீளக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றார்.

## வெண்மையாக்கும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலக்க நுகர்வோர் விவகார அதிகாரசபைச் சட்டத்தின்படி, அழகுசாதனப்பொருட்கள்மற்றும் திரவங்களில்இருக்கக்கூடியபாதரசத்தின்அளவு ஒருகிலோ கிராமிற்கு ஒருமில்லிகிராம் ஆகும். ஆனால், சருமத்தை வெண்மையாக்கும் க்ரீம்களில் அனுமதிக்கப்பட்ட வரம்பை விட அதிக அளவு பாதரசம் இருக்கின்றது.

இதனால்நரம்புகளைபாதிக்கும்நோய்கள், தோல் மெலிதல், குருதி நாளங்களில் பாதிப்பு தோன்றுதல் மற்றும் தோல் புற்றுநோய் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இதன் காரணமாக, உடனடி வெள்ளையாக்கும் கிரீம்களில் இருந்து விலகி இருப்பதே நல்லது.

## வெளிநாடுகளில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுவரநடவடிக்கைஎடுக்கப்படவேண்டும் என்றுமுன்னாள்நாடாளுமன்றஉறுப்பினரும்

# தமிழ் மக்கள் கூட்டணியின் தேர்தல் அறிக்கை வெளியீடு

தமிழ் மக்கள் கூட்டணியின் தேர்தல் அறிக்கை யாழ்ப்பாணத்தில் நேற்று வெளியிடப்பட்டது.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் கூட்டணி 'மான்' சின்னத்தில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் தனித்துப் போட்டியிடுகின்றது.

கட்சியின் செயலாளர் நாயகமான விக்கினேஸ்வரன் இந்தத் தேர்தலில் போட்டியிடவில்லை. யாழ். மாநகர முன்னாள் மேயர் மணிவண்ணன்தலைமையிலானஇளம் வேட்பாளர்களே இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

இந்த வேட்பாளர் நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் உள்ள மதத் தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடி ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டனர். இதனைத் தொடர்ந்து அந்தக் கட்சியின் யாழ்ப்பாணத்திலுள்ள தலைமை அலுவலகத்தில் நேற்று மாலை தேர்தல் அறிக்கை வெளியிட்டுவைக்கப்பட்டது.

கட்சியின் செயலாளர் நாயகம் சி.வி.விக்னேஸ்வரன், தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு வைக்கக் கட்சியின் முதன்மை வேட்பாளர் மணிவண்ணன் அதனைப் பெற்றுக்கொண்டார்.

இந்த வெளியீட்டு நிகழ்வில் கட்சி உறுப்பினர்கள் மற்றும் வேட்பாளர்கள், ஆதரவாளர்கள், எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். நிகழ்வின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய விக்னேஸ்வரன் தெரிவித்ததாவது:

அரசமைப்பு 13ஆவது திருத்த சட்டத்துக்கு எதிராகவே அந்தக் காலத்தில் இருந்து ஜே.வி.பியினர் செயற்பட்டனர். ஆனால் ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் அதற்கு மாற்றான கொள்கையுடன் அவர்கள் வாக்குக் கேட்டனர். இவ்வாறான நிலையில் இப்போது மீண்டும் தமது நிலைப்பாட்டையா ரில்வின் சில்வா ஊடாக வெளிப்படுத்த ஜே.வி.பியினர் முயல்கின்றனர்? ஆனாலும், அக்கட்சியின் பிமல் ரத்நாயக்க அப்படி அவர் கூறவில்லை என்றவாறாகக் கூறியிருக்கின்றார். இதனூடாக தமிழ் மக்களுக்கு எதிராக இவ்வாறான கருத்துக்களைக் கூறுவது அந்த மக்களின் மனங்களை நோகச் செய்யும் என்பது அவர்களுக்கே தெரிகின்றது போல் உள்ளது.

இந்த 13 ஆவது திருத்தச் சட்டம் எங்களுக்கு எந்தக் காலத்திலும் ஒரு நிரந்தர தீர்வாக அமையாது. ஆனாலும், இப்போது இருக்கும் 13 ஐயும் நாங்கள் பறிகொடுத்துவிட்டு ஜே.வி.பியினர் கூறுவது போன்று எல்லோரும் சமம் என்று போனால் அது மிகப் பெரிய ஆபத்தாகும். ஏனெனில் இந்த நாட்டில் பெரும்பான்மையாக இருப்பவர்கள் சிங்களவர்கள். அவர்களுடைய வாழ்க்கை முறையும் மொழியும் மதமும் எங்கள் எல்லோரையும் பீடிக்கக் கூடியதாகத்தான் அமையும்.

ஆகையினால் அவ்வாறான கருத்துக்களை நாங்கள் கண்டிக்கின்றோம். ரில்வின் சில்வா போன்றவர்கள் அவ்வாறு கூறுவது பிழை என்று தெளிவாகக் கூறுகின்றோம். இந்த 13ஆவது திருத்தத்தை பற்றி ஒவ்வொருவரும் ஒவ்வொரு கால கட்டத்திலும் மாறி மாறி கூறி வருகின்றதைப் பார்க்கின்றோம். அவ்வாறு அவர்கள் எதனைக் கூறினாலும் 13ஆவது திருத்தச் சட்டம் எந்தக் காலத்திலும் எங்களுக்கு ஒரு தீர்வாக அமையாது. அவ்வாறு அமையவும் போவதில்லை.

ஆனால், தமிழ் மக்களுக்கு எவ்வாறான தீர்வு தரப் போகின் றார்கள் என்று குறிப்பிடுகை யில் பொருளாதாரப் பிரச்சினைதான் எங்களுக்கு இருக்கின்றது என்று ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா குறிப்பிடுகின்றார்.

அதுவும் பொருளாதாரப் பிரச்சினை என்று கூறும்போது எங்களுடைய தமிழ்ப் பிரதேசங்களில் காணிகள் அபகரிக்கப்படுகின்றன. பௌத்த சின்னங்கள் கொண்டுவரப்பட்டு புதிய புதிய விகாரைகள் அமைக்கப்படுகின்றன.

வடக்கையும் கிழக்கையும் ஒருமித்து வைத்திருக்கும் இடத்திலே சிங்களப் பிரதேசத்தைக் கொண்டு வந்து எங்களுடைய தொடர்ச்சியை அற்றுப் போகச் செய்கின்றார்கள்.

குறிப்பாக வடக்கு, கிழக்கிலே அதிக இராணுவத்தினர் குவிக்கப்பட்டு இருக்கின்றார்கள். அதனால் எங்களுக்கு ஏற்படும் பலவிதமான சமூகப் பிரச்சினைகளை நாங்கள் எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றோம்.

இவற்றையெல்லாம் பற்றிக் குறிப்பிடாது பொருளாதார அபிவிருத்தி என்று சில விடயங்களைச் செய்வதால் பிரச்சினை தீரும் என ரில்வின் சில்வா நினைத்தாரானால் அது அவருடைய அறியாமையை வெளிப்படுத்துகின்றது.

அவர் கூறுவது தெற்குக்குப் பொருந்தும். எனினும், வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குப் பொருந்தாது - என்றார்.






# புதையல் தோண்டிய நால்வர் மஹியங்கனையில் கைது

## மேலும் மூவர் தப்பியோட்டம்

மஹியங்கனை, திவுலபெலஸ்ஸ பகுதியில் வியாழக்கிழமை பெக்கோ ,யந்திரம் மூலம் புதையல் தோண்டிய கொண்டிருந்த 04 பேர் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் மூவர் றொட்டவெலதிவுலபெலஸ்ஸ பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் மற்றைய சந்தேக நபர் கிராதுருக்கோட்டை பகுதியைச் சேர்ந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மஹியங்கனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கிடைக்கப்பெற்ற ,ரகசிய தகவலுக்கு அமைய குறித்த பகுதியில் சுற்றிவளைப்பினை மேற்கொண்ட போது கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களுடன் ,ருந்த மேலும் மூவர் தப்பிச் சென்றுள்ளதாகவும், அவர்களை கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பதுளை மாவட்டத்திற்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் சுஜித் வெதமுல்ல, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வசந்த கந்தேவத்த, உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜி.டபிள்யூ.எஸ்.பி. பலிபான ஆகியோரின் பணிப்புரையின் பேரில், மஹியங்கனை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி பிரபோப சந்தன உள்ளிட்ட குழுவினரால் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக

# முட்டையின் விலையை நிர்ணயம் செய்ய விலைச் சூத்திரம் கொண்டு வரவேண்டும்

## முட்டை வர்த்தக சங்கங்கள் அறிவிப்பு

முட்டை விலையை நிர்ணயம் செய்வதற்கு விலை சூத்திரம் ஒன்றை கொண்டு வர வேண்டும் என முட்டை வர்த்தக சங்கங்கள் அரசாங்கத்துக்கு கோரிக்கை விடுத்துள்ளன.

அகில ,லங்கை முட்டை வர்த்தக சங்கத்தின் செயலாளர் அனுர மாரசிங்க ,து தொடர்பில் தெரிவிக்கையில் -

முட்டை ஒன்றை உற்பத்தி செய்வதற்கு 25 ரூபாவிற்கும் குறைவாகவே செலவாகுகின்றது. எனவே சந்தையில் ஒரு முட்டையை 35 ரூபாவிற்கு விற்பனை செய்ய முடியும்.

முட்டை விலை தொடர்பான நெருக்கடிகள் ,ன்னும் தீர்க்கப்படவில்லை. சந்தையில் ஒரு முட்டையின் விலை 40 ரூபா முதல் 45 ரூபா வரை அதிகரித்துள்ளது.

,தனால், முட்டை விலையை நிர்ணயம் செய்வதற்கு விலை சூத்திரம் ஒன்றை கொண்டு வர வேண்டும். ஒரு முட்டையின் உண்மையான உற்பத்தி செலவு 20 முதல் 23 ரூபாய் ஆகும்.

ஒரு முட்டையின் உண்மையான உற்பத்திச் செலவு 20 ரூபா முதல் 23 ரூபா வரை ஆகும். ,தனால் சந்தையில் ,ருந்து ஒரு முட்டையை 30 ரூபாவுக்கு கொள்வனவு செய்ய முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(05)

# நீதிமன்றில் பணம் திருட்டு குருணாகலில் சம்பவம்

குருணாகல், வாரியப்பொல நீதிவான் நீதிமன்றத்தின் வழக்கு பொருள்களை வைக்கும் அறையிலிருந்து 02 லட்சத்து 55 ஆயிரம் ரூபா திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் வாரியப்பொல பொலிஸ் நிலையத்திற்கு வியாழக்கிழமை முறைப்பாடு ஒன்று கிடைத்துள்ளது.

வாரியப்பொல நீதிவான் நீதிமன்றத்தின் அதிகாரி ஒருவரால் இந்த முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த திருட்டு சம்பவம் கடந்த ஜூலை மாதம் 7 ஆம் திகதிக்கும் ஒக்ரோபர் மாதம் 16 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இடம்பெற்றிருக்கலாம் என முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் வாரியப்பொல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# யாழில் நிமோனியாவால் பெண் ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணத்தில் நிமோனியா காய்ச்சலினால் பெண்ணொருவர் வியாழக்கிழமை உயிரிழந்துள்ளார்.

கோப்பாய் தெற்கை சேர்ந்த 44 வயதுடைய பெண்ணே உயிரிழந்துள்ளார்.

உடற்கூற்றுபரிசோதனையில் நிமோனியாவால்தான் மரணம் சம்பவித்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (05)



# இந்தியாவின் பௌத்த மரபு குறித்த கண்காட்சி ஊவா மாகாணத்தில்



இந்திய உயர்ஸ்தானிகராலயத்தால் ஒழுங்கமைக்கப்படும் இந்தியாவின் உயர்ந்த பௌத்த மரபு குறித்த கண்காட்சியின் 9வது பதிப்புவப்போயாதினத்தை முன்னிட்டு ஒக்கம்பிட்டியவில் உள்ள தெமதமல்விகாரையில்வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்த கண்காட்சியானது சங்கைக்குரிய கல்தேம்வத்த புக்னானந்த தேரர் மற்றும் அம்பாந்தோட்டைக்கான இந்திய கொன்சூல் ஜெனரல் ஹர்விந்தர் சிங் ஆகியோரால் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.





புத்தபெருமானின் வாழ்வின் முக்கிய தருணங்களையும் இந்தியாவின் முக்கிய பௌத்த யாத்திரைத் தலங்களையும் சித்திரிக்கும் ஒரு தொகுதி புகைப்படங்கள் இங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

உயர் ஸ்தானிகராலயத்தால் முன்னெடுக்கப்படும் இந்தியாவின் உயர்ந்த பௌத்த மரபு குறித்த இக்கண்காட்சியானதுஇ ஒவ்வொரு போயா தினத்திலும் முக்கியத்துவம் வாய்ந்த பௌத்த ஸ்தலங்களில் நடத்தப்பட்டு வருகிறது. நவம் போயா தினத்தன்று களுத்துறை போதி வளாகத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்ட இந்த கண்காட்சி தொடர், கீழ்வரும் விகாரைகள் மற்றும் ஸ்தலங்கள் உட்பட பல்வேறு இடங்களில் நடத்தப்பட்டுள்ளது.

நவம் போயா தினம் - களுத்தறை, களுத்தறை போதி வளாகம்

மதின் போயா தினம் - கொழும்பு, ஸ்ரீஊண சம்போதி மஹா விகாரை

பக் போயா தினம் - ரத்மலானை, பரம தம்ம சைத்திய பிரிவேனா

வெசாக் போயா தினம் - மாத்தளை, தர்மராஜ பிரிவேனா

பொசன் போயா தினம் - குருணாகல் உமந்தாவ உலக பௌத்த கிராமம்

எசல போயா தினம் - பதுளை, முதியங்கனை ரஜமகா விகாரை

நிகினி போயா தினம் - கண்டி, அஸ்கிரிய மகா விகாரை பிரிவேனா

பினார போயா தினம் - திக்குவல்லை, வேவுருக்கண்ணல புதுராஜ மகா விகாரை

இந்த கண்காட்சியின் ஆன்மிக மற்றும் கலாசார முக்கியத்துவத்தை பக்தர்கள் மெச்சுகின்ற நிலையில் ஒவ்வொரு பதிப்புக்கும் அமோக வரவேற்பு கிடைத்திருந்தது. இருநாடுகளுக்கும் இடையில் காணப்படும் மிகவும் தொன்மை மிக்க நட்புறவினதும் ஒத்துழைப்பினதும்பிணைப்புகளை இது வலுவாக்குவதுடன் இரு நாட்டு மக்களிடையிலான தொடர்புகளை மேலும் வலுவாக்குவதற்கான எமது கூட்டு முயற்சிகளையும் ஆழமாக்கும் வகையில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான ஆழமான கலாசார உறவுகளையும் சுட்டிக்காட்டுகிறது.(05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.10.2024இல் வெளியிடப்பெற்றது